## சென்னை மெட்ரோ ரெயில் பயணிகளுக்கிடையே

# அதிகரித்து வரும் சீருந்து இணைப்பு பயணச் சேவை!

## பொதுமக்கள் பாராட்டு!!

சென்னை, செப். 09–

சென்னை மெட்ரோ நிறுவனம் 11.8.2018–ல் தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களில் மெட்ரோ ரெயில் பயணிக்கும் பயணிகளுக்காக பல போக்குவரத்து இணைப்பு நடவடிக்கைகளை வழங்குவதற்கான முன் முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

7 மெட்ரோ ரெயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ இணைப்பு சேவைகள் ரூ. 5 கட்டணத்தில் குறிப்பிட்ட பாதைகளில் இயங்குகின்றன.

அதேபோல ஷேர் டாக்சி சேவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரெயில் நிலையங்களில் 10 கட்டணத்துடன் 3 கிலோ மீட்டர் தூரம் வரை இயங்குகின்றன.

சீருந்து வாகனம்

மேற்கண்ட வசதிகளுக்கு கூடுதலாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் கடந்த 5.8.2019 முதல் பெங்களூர் மெகா கேப்ஸ் நிறுவனத்துடன் இணைந்து சீருந்து இணைப்பு சேவையை நந்தனம், ஏ.ஜி.டி.எம்.எஸ்., ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி. அரசினர்தோட்டம் மற்றும் சென்னை சென்னை சென்ட்ரல் ஆகிய 6 மெட்ரோ ரெயில் நிலையங்களில் துவக்கியுள்ளது. கட்டணம் ரூ.10 ஆகும்.

இந்த இணைப்பு சேவை ஒவ்வொன்றும் மெட்ரோ ரெயில்நிலையத்திலிருந்தும் 6 முதல் 8 கி.மீ. தூரம் வரை செயல்படும். இந்த சேவை படிப்படியாக மற்ற மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

இந்த ஆகஸ்டு மாதம் மெட்ரோ இருந்து இணைப்பு சேவையை 6 ரெயில் நிலையங்களில் இருந்தும் 4987 பயணிகள் பயன்படுத்தியுள்ளனர். இதில் அதிகபட்சமாக ஏஜி டிஎம்எஸ் ரெயில் நிலையத்தில் 1083 பேரும், அடுத்து ஆயிரம் விளக்கில் 1220 பயணிகளும் பயன் பெற்றுள்ளனர்.

மெட்ரோ ரெயில் பயணிகள் மத்தியில் இந்த 10 ரூபாய் சேவை மிகவும் வரவேற்பை பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.